Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions prosecution<br>depositions of witness for | STC. 98/2023<br><br>PW1 Cross |

| | | |
|---|---|---|
| Time | : | 4.27pm – pm |
| Name | : | திரு. Suresh |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 25th day of June 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

**குறுக்கு விசாரணை**

**1.** இந்த காசோலை மோசடி வழக்கை கடன் ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நிலுவை தொகைக்காக தாக்கல் செய்துள்ளோம். பு.த.சா.ஆ. 7 கடன் ஒப்பந்த பத்திரத்தை எனது நிறுவனமும், எதிரியும் சேர்ந்து எழுதிக் கொண்ட ஆவணம் என்றால் சரிதான். ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சரத்துக்கள் இரு தரப்பிலும் பரஸ்பர ஒப்பந்த அடிப்படையில் தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனது நிறுவனம் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவில் விதி முறைகளுக்கு உட்பட்டு தான் இயங்கி வருகிறது என்றால் சரிதான். இந்த ஒப்பந்த தொகை ரூ. 3 லட்சம் என்றால் பைனன்ஸ் கடன் தொகை ரூ. 3,00,000/- ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன் ஒப்பந்த பத்திரத்தில் கடன் தொகை ரூ. 3,00,000 /-என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூ. 3,00,000/- தொகைக்கு தான் மாத தவணையாக ரூ. 16,400 வீதம் மொத்தம் 23 தவனைகள் செலுத்துவதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் படி 23 தவனைகளுக்குச் சேர்ந்து மொத்தம் ரூ. 3,77,200/- என்றால் சரிதான்.

2. 10/02/2020 ல் இருந்து 10/08/2020 வரை மொத்தம் 6 தவணைகள் செலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மேற்படி கால கட்டத்தில் எந்த தொகையும் எதிரியிடமிருந்து வாங்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள Statement படி எதிரி 17 தவணைகளை செலுத்த தவறியுள்ளதாக சொல்லியுளோம் என்றால் இல்லை. பு.த.சா.ஆ. 6 Statement ல் Installment 1 என்று காட்டி விட்டு பிறகு 8 என்று காட்டி உள்ளோம் என்றால் சரிதான். கொரோனா காலத்தின் காரணமாக Moratorium Waiver கொடுத்துள்ளதால் அவ்வாறு காட்டியுள்ளோம். பு.த.சா.ஆ. 6 Statement ல் Installment 8 முதல் 23 வரை காட்டி உள்ளோம் என்றால் சரிதான். Installment 8 முதல் 23 வரை உள்ள மொத்த தொகை ரூ. 2,78,800/- என்றால் சரிதான்.

3. 10/01/2021 வரை தான் எதிரி தவணை தொகையை செலுத்தியுள்ளார். அதன் பிறகு செலுத்தவில்லை. எதிரி தவணை தொகையை செலுத்த தவறிய பிறகு எந்த தேதியில் எதிரியிடமிருந்து வாகனத்தை பறி முதல் செய்தோம் என்றால் 21/10/2021 ல் ஓர்க்ஸ் ஷாப்பில் வாகனம் இருப்பதாக சொல்லி வாகனத்தை எடுத்துக் கொள்ள சொன்னதால் எதிரியின் வாகனத்தை பறி முதல் செய்தோம். எதிரியின் அனுமதியின் பெயரில் தான் எதிரியின் வாகனத்தை மறு விற்பனை செய்தோம் என் றால் ஆமாம். எனது புகாரில் எதிரியின் வாகனத்தை நாங்களாகவே பறி முதல் செய்ததாக சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம்.

4. எதிரியின் வாகனத்தை எவ்வளவு ரூபாய்க்கு மறு விற்பனை செய்தோம் என்றால் ரூ. 51,000/- க்கு மறு விற்பனை செய்தோம். எனது புகாரில் எதிரியின் வாகனத்தை ரூ. 51,000/- க்கு மறு விற்பனை செய்ததாக குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். எதிரியின் கடன் ஒப்பந்தப்படி 10/11/2021 ல் முடிவிற்கு வருகிறது என்றால் இல்லை. Moratorium Waiver கொடுத்துள்ளதால் 10/06/2022 ல் தான் கடன் முடிவிற்கு வ ருகிறது. 23 தவணைகள் 29 தவணைகளாக மாற்றம் செய்யப்பட்டது குறித்து எதிரிக்கு எந்த ஒரு தகவலும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கணக்கு பட்டியலில் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் 29 தவணைகள் என்று தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.

5, எதிரி செலுத்த வேண்டிய 23 தவணைகளை செலுத்தி விட்டார் என்றும் எங்கள் நிறுவனத்தின் எதேச்ச அதிகாரத்தை பயன்படுத்தி நாங்களாகவே 29 தவணைகள் என்று அதிகப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. 29 தவணைகளுக்கு சேர்த்து ரூ. 4,75,600/- வருகிறது என்றால் சரியல்ல. 6 மாதம் Moratorium Waiver கொடுத்த தவணைகளை சேர்த்து 29 ஆக காட்டியுள்ளோம். எனது புகாரில் மாதம் ரூ.16,400 வீதம் 29 தவணைகள் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒப்பந்த தொகையாக ரூ. 4,30,918 என்று குறிப்பிட்டுள்ளோம். எனது புகாரில் Moratorium Waiver காரணமாக 23 தவணைகளை 29 தவணைகளாக காட்டியுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள புகார் பிழையுள்ள புகார் என்றும் அதன் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல. கணக்கு பட்டியலில் சொல்லியுள்ளோம்.

6. கொரோனா காலத்தில் தவணை தொகை செலுத்துவதை நிறுத்தி வைத்திருந்தோம் என்றால் சரிதான். தவணை செலுத்த வேண்டிய மாதங்களின் எண்ணிக்கை தான் அதிகமாகுமே தவிர தவணை தொகை அதிகம் ஆகாது என்றால் சரிதான். எனது நிறுவனத்தில் நாராயணன் என்பவர் பணம் வசூலிக்கும் அதிகாரியாக பணிபுரிந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் வேறு ஒரு துறையில் பணிபுரிகிறார். கலக்சன் டிபார்ட் மென்ட் வேறு. நாராயணன் எதிரியிடமிருந்து அனைத்து தவணை தொகையையும் பெற்று விட்டார் என்றும் நாராயணன் எனது நிறுவனத்தில் கையாடல் செய்ததால் தான் அவர் நிறுவனத்தில் இருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. நாராயணன் வேறு துறையில் பணிபுரிவதால் அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நாராயணனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். சாட்சி மீண்டும் நான் விசாரிக்கவில்லை என்று கூறுகிறார்.

7. கொரோனா காலத்திலும் நாராயணன் எதிரியிடமிருந்து தவணை தொகைகளை வசூல் செய்து விட்டார் என்றால் சரியல்ல. 2022 ஜீன் மாதம் கடன் முடிந்த பிறகு வரா கடனாக நான் வசூலிப்பதற்காக அதிகாரம் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. டிசம்பர் 2021 ல் எதிரியின் வாகனம் மறு விற்பனை செய்யப்பட்ட பிறகு எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் எனக்கு தனிப்பட்ட அதிகாரம் வழங்கப்பட்டதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தனிப்பட்ட அதிகாரம் வழங்கவில்லை. பொது அதிகாரம் தான் வழங்கியுள்ளார்கள். இந்த வழக்கில் கடனை வசூலிக்க ஒப்பந்த ஆவணத்தை தவிர எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எனது நிறுவனத்தில் இருந்து எனக்கு 23/12/2021 ல் தான் அதிகாரம் வழங்கியுள்ளார்கள் என்றால் அதற்கு முன்பாகவே அதிகாரம் கொடுத்துள்ளார்கள். புதுப்பிக்கப்பட்ட ஆவணத்தை தாக்கல்

செய்துள்ளேன்.

8. நான் தாக்கல் செய்துள்ள பு.த.சா.ஆ. 1 பொது அதிகார ஆவணப்படி 23/12/2021 ல் தான் எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டு அந்த தேதியில் இருந்து தான் தொடர்கிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் படி இந்த வழக்கை நடத்துவதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு நிறுவனத்தில் இந்த வழக்கு கடனை வசூலிப்பதற்காக நிர்வாக இயக்குனர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. எனது நிறுவனத்தில் எந்த வருட வருமான வரி கணக்கில் எதிரி செலுத்த வேண்டிய கடன் தொகை Loss of Pay ல் காட்டியுள்ளோம் என்றால் அவ்வாறு காட்டவில்லை. சாட்சி மீண்டும் நிறுவனத்திடம் கேட்டு சொல்வதாக கூறுகிறார்.

9. சட்டத்தில் இருந்து தப்பிப்பதற்காக கொரோனா காலத்தில் எதிரியிடம் வாங்கிய தவணை தொகைகளை மறைத்து அதிகப்படியான தவணை தொகைகளை செலுத்த வேண்டுமென்று காட்டி எதிரிக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியிடம் கடனை செலுத்தாமல் ஏமாற்றி வருகிறார். புகாரில் சொல்லியுள்ள 29 தவணைகள் கடன் ஒப்பந்த பத்திரத்தில் சொல்லியுள்ள 23 தவணைகளுக்கு முரண்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. எனது நிறுவனத்தின் அடி ஆட்கள் எதிரியிடமிருந்து வாகனத்தை பறி முதல் செய்து விட்டு மொத்த தொகையையும் பெற்று சென்று விட்டார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ளது போல் எதிரியை எங்கள் நிறுவனத்தில் அழைக்கவில்லை என்றும், எதிரி எங்கள் நிறுவனத்திற்கு வந்து காசோலை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியிடமிருந்து ஏற்கனவே பெற்ற காசோலையை பயன்படுத்தி எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிக்கு தகவல் எதுவும் தெரிவிக்காமல் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

10. நிலுவை தொகையை ஒப்புக் கொண்டு தான் எதிரி காசோலை கொடுத்தார். மாற்று முறை ஆவணச் சட்டத்தின் கீழ் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றும் எனவே எதிரி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. எதிரி சட்டப்படி நிலுவை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். எதிரி எங்கள் நிறுவனத்திற்கு எந்த ஒரு தொகையையும் நிலுவை தொகையாக செலுத்த வேண்டியது இல்லை என்றும், வாகனத்தை மறு விற்பனை செய்த தொகையை எதிரி கேட்டதால் எதிரிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

PARKAVI V

JUDICIAL MAGISTRATE (FAST TRACK COURT)
Digitally signed by PARKAVI V
Location: HOSUR